ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2040/1 - 2017 ඔක්තෝබර් මස 09 වැනි සඳුදා - 2017.10.09
*2040/1 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: விஇ/டிஎஸ்/எல்எல்டி/எல்ஏ/பத்/02.
காணி அமைச்சின் இல.: 4-3/4/2013/D/147.

பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில், பத்தமேனி (J/ 281) கிராம அலுவலர் பிரிவில், பத்தமேனி கிராமத்தில் அமைந்துள்ள, ஆரம்ப வரைபட இல. யா/ 2871 இல் காட்டப் பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:-

**01. துண்டு இல. 01**
காணியின் பெயர் : கூத்ததோட்டம்; விபரம்: மூன்று நிரந்தரக் கட்டிடங்கள், ஒரு தற்காலிகக் கட்டிடம், கிணறு, மலசலகூடம் மற்றும் மோட்டார் அறை கொண்ட காணி; உரிமை கோருபவர்: கே. ஈ. சந்திரபாலா; விஸ்தீரணம்: 0.2946 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(திருமதி) சுபாகினி மதியழகன்,
பிரதேச செயலாளர்,
வலிகாமம் கிழக்கு.

பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்,
2017, செத்தெம்பர் 28.

10 - 619


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**கவனிக்க:-** 2039/ 1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி தொடரின் இறுதி இல. 2039/ 36 ஆகும்.